**STC NO**.2375 /2023 **நாள்-** 14.12.2023 **பக்கம்** /2023

**அ.சா .1 பாலகுருசாமி , த/பெ.குழந்தைசாமி**

**எதிரி ஆஜர் இல்லை.**

**சத்திய பிரமாணம் செய்யப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1) நான் தாக்கல் செய்துள்ள புகார் மற்றும் பிரமாண வாக்குமூலத்தை படித்துப் பார்த்துத்தான் நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். நான் என்ன தொழில்செய்கிறேன் என்றால் பைனான்ஸ் தொழில் செய்து வருகிறேன். Heera Capital என்ற பெயரில் பைனான்ஸ் நடத்தி வருகிறேன். அதில் நான் பங்குதாரரா அல்லது முதல்வரா என்றால் நான் முதல்வர் ஆவேன். பங்குதாரர்களின் பெயர்கள் எனது மனைவி பானுமதியும், நானும் பங்குதாரர்கள் ஆவோம்.

2) எங்கள் நிறுவனத்தில் சுந்தர்ராஜ் என்பவர் மட்டுமே பணிபுரிந்து வருகிறார். நான் பைனான்ஸ் தொழில் செய்து வருவதால் எனக்கு பணபரிவர்த்தனை விவரங்கள் மற்றும் கடனுறுதி ஆவணங்களின் பயன்படுகள் பற்றியும், எனக்கு நன்றாகத் தெரியுமா என்றால் தெரியும். எங்கள் நிறுவனத்தில் எந்த வகையான கடன் பெற்றாலும் கடன் பெற்றவர் அதற்கு ஜாமீன் கொடுத்தவர் கடன் தொகை, மேலும் கடன் பெற்றவர் ஜாமீன் கொடுத்தவர் விபரங்கள் பற்றி லெட்ஜர் பராமரித்து வருவோம் என்றால் சரிதான்.

3) எந்த வகையான கடன் கொடுத்தாலும் அதற்கு வட்டி போடுவோம் என்றால் சரிதான். நாங்கள் பராமரித்து வரும் லெட்ஜரில் கடன் வாங்குபவர் கையெழுத்தும், ஜாமீன் கையெழுத்து செய்தவர் கையெழுத்தும் இருக்கும் என்றால் ஒருசில நபர்களுக்கு வாங்குவோம், ஒரு சில நபர்களிடம் வாங்குவதில்லை. ரெகுலராக எங்களிடம் வரவு செலவு செய்பவர்களிடம் ஜாமீன் கையெழுத்து வாங்குவதில்லை. புதிதாக வரவு செலவு செய்பவர்களிடம் ஜாமீன் கையெழுத்து வாங்குவோம்.

நீதித்துறை நடுவர் எண்.2,கரூர்

4) எதிரியை சுதாகர் என்பவர் எங்களிடம் வாகனக்கடன் பெற்றதன் மூலம்தான் தெரியும் என்றால் சரிதான். சுதாகர் என்பவர் எங்களிடம் மேற்படி வாகனக்கடனைத்தான் முதன் முதலாக பெற்றார் என்றால் சரிதான். மேற்படி கடன் எப்போது வாங்கினார் என்றால் 2019-ம் ஆண்டு வாங்கினார். TN 32 J 0999 என்ற எண்ணுள்ள வாகனத்திற்கு எவ்வளவு கடன் வாங்கினார் என்றால் ரூ.5 லட்சம் வாங்கினார். மேற்படி வாகனக்கடனுக்கான வரவு செலவு ஆவணங்கள் மற்றும் கணிணி பதிவுகள் என் வசம் உள்ளதா என்றால் உள்ளது.

5) மேற்படி வாகனக்கடன் எந்த ஆண்டு எப்போது முடிக்கப்பட்டது என்றால் 8 ம் மாதம் 2020-ம் ஆண்டு மேற்படி கணக்கு முடிக்கப்பட்டது. மேற்படி சுதாகர் வாங்கிய லோனின் கணக்கு எண் என்ன என்றால் ஞாபகம் இல்லை. எத்தனை தவணைகாக கடன் போடப்பட்டது என்றால் 20 தவணைகளாக போடப்பட்டது. 2019-ம் ஆண்டு எந்த மாதத்தில் வாகனக்கடன் வாங்கப்பட்டது என்றால் 10 ம் மாதத்தில் வாங்கப்பட்டது. மேற்படி வாகனக்கடனின் லெட்ஜரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்வதற்கு தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன்.

6) எதிரியின் கணவர் எத்தனை தவணைகள் தொடர்ச்சியாக செலுத்தி வந்தார் என்றால் 6 தவணைகள் மட்டுமே சரியாக செலுத்தி வந்தார். எதிரியின் கணவரின் வாகனம் போலீசில் வழக்கிற்காக மாட்டிக் கொண்டதால் என்னிடமிருந்த முழு தவணை தொகைகளையும் செலுத்திவிட்டு வாகனத்தின் அசல் ஆவணங்களை பெற்று சென்றுவிட்டார். நான் 6 தவணைகளுக்கு பின்னிட்டு எதிரியின் கணவர் பணம் செலுத்தாததால் அவர்களின் வீட்டிற்கு சென்று தகராறு செய்ததன் அடிப்படையில் என் பெயரில் போலீசில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான்.பின்னிட்டு சாட்சி வாகனக்கடனுக்காக நான் வீட்டிற்கு சென்று கேட்கவில்லை. எதிரி என்னிடம் தனிப்பட்ட வாங்கிய கடனுக்காக நான் சென்று கேட்டபோது பிரச்சனை ஏற்பட்டு போலீஸ் வழக்கானது.

நீதித்துறை நடுவர் எண்.2,கரூர்

7) போலீஸ் வழக்கானது எந்த ஆண்டு என்றால் 2021-ம் ஆண்டு ஆகும். எதிரி கடன் பெற்றதற்காக போலீஸ் வழக்கு ஏற்பட்டது என்று நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், அதனால்தான் என்னால் எதிரி கொடுத்ததாக சொல்லப்படும் புகாருக்கு தேதியோ, மாதமோ என்னால் சொல்ல முடியவில்லை என்றால் சரியல்ல. சுதாகருக்கு எதிரியானவர் மேற்படி வாகனக்கடனுக்கு ஜாமீன்தாரராக இருந்தார் என்றால் சரியல்ல. எதிரிக்கு கடன் கொடுத்ததாக சொல்லப்படும் தேதியில் அவரது வீட்டில் சுப காரியமோ அல்லது துக்க காரியமோ எதுவும் இல்லை என்றால் சரிதான்.

8) எதிரியிடம் நான் கொடுத்ததாக சொல்லப்படும் கடன் குறித்து எதிரி என்னிடம் எந்த தேதியில் கடன் கேட்டார் என்றால் பணம் வாங்குவதற்கு 2 நாட்களுக்கு முன்பு அவசரக்குடும்ப செலவிற்காக வேண்டும் என்று கேட்டார். 07.03.2021-ம் தேதியில் நான் எதிரிக்கு கடன் கொடுத்தேன். எதிரிக்கு நான் கடன் கொடுத்ததாக சொல்லப்படும் தொகையானது என் சொந்த பணத்திலிருந்து எடுத்துக் கொடுத்தேனா அல்லது நிறுவனத்திலிருந்து எடுத்துக் கொடுத்தேனா என்று பிரமாண வாக்குமூலத்திலோ, புகாரிலோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

9) எதிரிக்கு கொடுத்ததாக சொல்லப்படும் தொகையை எந்த இடத்தில் வைத்து கொடுத்தேன் என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. ரூ.20 ஆயிரத்திற்கு மேல் பணப்பரிவர்த்தனை செய்யும்போது வங்கியின் மூலமாகத்தான் கொடுக்கவேண்டும் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். எதிரிக்கு நான் கொடுத்ததாக சொல்லப்படும் கடன் தொகையை நான் ரொக்கமாக கொடுத்தேனா அல்லது வங்கி பரிவர்த்தனை மூலமாக கொடுத்தேனா என்று என் புகாரிலோ, முதல் விசாரணை வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை.

நீதித்துறை நடுவர் எண்.2,கரூர்

10) நான் வருமானவரி செலுத்தி வருகிறேன் என்றால் சரிதான். நான் கடன் கொடுத்ததாக சொல்லப்படும் தேதி 07.03.2021-ம் தேதியில் வருட வருமானவரி செலுத்தும்போது எனது நிறுவனத்தின் சார்பிலோ, என் சொந்த வருமான வரி கணக்கிலோ மேற்படி எதிரிக்கு நான் கொடுத்ததாக சொல்லப்படும் கடன் தொகைக்கு குறிப்பிட்டு எழுதி வருமானவரி செலுத்தியுள்ளேனா என்றால் இல்லை. கைமாற்றுக் கடன் என்பதால் காண்பிக்கப்படவில்லை. வருமானவரி செலுத்துவதற்கு என்னென்ன கடன்கள் உள்ளடக்கம், என்னென்ன கையிருப்பின் உள்ளடக்கம் என்ற விவரம் எனக்குத் தெரியும். கைமாற்றுக்கடனுக்கு வருமானவரி கணக்குகளை காட்டவோ அல்லது வரி விதிவிலக்கோ இல்லை என்பது எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. நான் பைனான்ஸ் தொழில் செய்வதால் எனக்கு நன்கு விபரங்கள் தெரியும் என்றும், தெரிந்து கொண்டே வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

11) நான் தாக்கல் செய்துள்ள புகார் மனுவில் பாரா 2ல் இவ்வழக்கு காசோலையை எதிரி என்னிடம் கொடுத்ததாக சொல்லும் சமயத்தில் எதிரியின் வங்கி கணக்கில் பணம் இருப்பதாகவும் அதனால் தாங்கள் எப்போது காசோலையை தாக்கல் செய்தாலும் பணமாகிவிடும் என்று கூறியுள்ளார் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். யார் ஒருவரும் அவருடைய வங்கிக் கணக்கில் போதுமான தொகை வைத்துக் கொண்டு ஒரு மாவட்டத்திலிருந்து இன்னொரு மாவட்டத்திற்கு சென்று கடன் கேட்கமாட்டார்கள் என்றால் என் வீட்டிற்கும், எதிரியின் வீட்டிற்கும் சுமார் 25 கி.மீ. தான் இருக்கும்.

12) நான் எதிரிக்கு கடன் கொடுத்ததற்காக கடனுறுதி ஆவணங்கள் ஏதேனும் பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அவர் காசோலை கொடுத்துள்ளார். வேறு புரோநோட்டோ, பாண்டோ தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா காசோலையை வைத்து சிவில்

நீதிமன்றத்தில் பரிகாரம் எதுவும் கேட்கவில்லை என்றால் கேட்கவில்லை. எதிரிக்கு நான் உண்மையாக கடன் கொடுக்காததால்தான் நான் சிவில் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு காசோலை ம.சா.ஆ.1 ல் காசோலை நிரப்பப்பட்டதற்கும் கையெழுத்தும், மையும் வித்தியாகசமாக உள்ளது என்றால், உள்ளது. ஆனால் எதிரிதான் மேற்படி காசோலையை என் பெயருக்கு நிரப்பியே கொண்டு வந்து கையெழுத்திட்டு கொடுத்தார்.

13) மேற்கண்ட சங்கதியை நான் எனது புகாரிலோ, முதல் விசாரணையிலோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எதிரி என்னிடத்தில் நிரப்பப்பட்டோ, கையெழுத்திடப்பட்டோ காசோலையை கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்யும்போது எதிரியிடம் உங்கள் வங்கியில் பணம் உள்ளதா என்ற விவரத்தை தெரிந்து கொண்டேனா என்றால் நான் எதிரியிடம் கேட்டேன். மேற்படி காசோலை திரும்பியது குறித்து எதிரியிடம் கேட்டேனா என்றால் கேட்டேன். மேற்படி விவரத்தை என் புகாரிலோ, என் முதல் விசாரணையிலோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை,

14) உண்மையாகவே எதிரியை எனக்கு நன்கு தெரியாது என்பதால்தான் நான் காசோலையை வசூலுக்கு செலுத்தியபோதும், திரும்பிய பின்பும் கேட்டதாக சொல்கிறேன் என்று என் புகாரிலும், முதல்விசாரணையிலும் கூறாமல் தற்போது கேட்டேன் என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதேபோல் ஏற்கனவே சுதாகர் என்பவர் வாகனக்கடன் பெற்று சரிவர திரும்ப செலுத்தாததற்கு அதற்காக போலீஸ் புகார் ஏற்பட்ட பின்பும் அவரது மனைவிக்கு நான் கடன் கொடுத்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

நீதித்துறை நடுவர் எண்.2,கரூர்

15) நான் உண்மையாக எதிரிக்கு கடன் கொடுத்திருந்தால் நான் வருமானவரிக்கணக்கில் காண்பித்திருப்பேன் என்றால் கைமாற்றுக் கடன் என்பதால் நான் வருமானவரிக்கணக்கில் காண்பிக்கவில்லை. நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. நான் கடன் கொடுத்ததாக சொல்லப்படும் தேதியில் எனது கையிருப்பில் மேற்படி தொகை இருந்ததற்கு ஆவணங்கள் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை. நான் எதிரியின் கணவருக்கு எங்கள் நிறுவனத்தின் சார்பாக கொடுத் தகடனக்கு NOC கொடுக்கப்பட்டிருந்தால் மேற்படி வாகனக்கத்தின் எங்களது நிறுவனத்தின் Hypothication நீக்கப்படும் என்றால் நான் NOC கொடுத்துவிட்டேன். மற்படி அவர் ஆர்.டி.ஓ. ஆபிஸ் என்றுதான் அணுகவேண்டும்.

16) எதிரியின் கணவர் என்னிடம் 22 தவணைகள் செலுத்தியுள்ளார் என்றும், அதற்கிடையில் அவரின் வாகனம் குற்ற வழக்கில் மாட்டியதால் அவர் பணம் தொடர்ந்து செலுத்தாமல் இதுநாள் வரை என்னிடம் அதுநிலுவையில்தான் இருந்து வருகிறது என்றும், நான் NOC எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. என்னிடத்தில் எதிரியின் கணவர் வாகனக்கடன் வாங்கும்போது கையொப்பம் இடாத நிரப்பபப்படாத எதிரியின் வெற்று காசோலையையும், மேற்படி எதிரியின் கணவர் பெற்ற வாகனக்கடனுக்கு பொறுப்பிற்காக நான் பெற்றுக்கொண்ட காசோலையை வைத்து மேற்படி வாகனக்கடனுக்கு எங்கள் நிறுவனத்தில் உள்ள லெட்ஜர்களை பார்த்து போலியாக கையொப்பம் செய்து காசோலையை நிரப்பு பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

17) பொதுவாக ஒருவர் ஒரு கடனை செலுத்தவில்லை என்றால், மீண்டும் அவருக்கு கடன் கொடுக்கமாட்டோம் என்றால் சரிதான். மேற்படி சுதாகர் செலுத்தவேண்டிய வாகனக்கடனை செலுத்தாமல் போலிஸ் புகார் வரை சென்றபிறகு அவரின் மனைவிக்கு நான் கடன்

நீதித்துறை நடுவர் எண்.2,கரூர்

கொடுத்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையாக எதிரிக்கு நான் கடன் கொடுத்திருந்தால் அந்த பணம் ரொக்கமாகவா அல்லது வங்கி கணக்கு மூலமாகவா எந்த இடத்தில் வைத்து கொடுத்தேன் என்ற விவரத்தை கூறியிருப்பேன் என்றால் சொல்லவில்லை.

18) சுதாகர் வாங்கிய வாகனக்கடன் முடிந்துவிட்டதா இல்லையா என்று எனது நிறுவனத்தின் கணக்கு நோட்டை பார்த்தால் தெரியும் என்றால் தெரியும். எதிரி என்னிடத்தில் கடன் வாங்கவேண்டிய அவசியம் இல்லை என்றாலும், மேற்படி சுதாகர் பெற்ற வாகனக்கடனை வசூல் செய்யவேண்டும் என்ற நோக்கத்தில் பூர்த்தி செய்யப்படாத கையொப்பம் செய்யப்படாத காசோலையை நானே நிரப்பி இந்த வழக்கு தாக்கல்செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால்தான் நான் தாக்கல் செய்த புகாரின் 2 வது பாராவில் எதிரி என்னிடம் கடன் கொடுத்ததாக சொல்லும் சமயத்தில் வங்கி கணக்கில் பணம் இருந்ததாக கூறி சங்கதிகள் காணப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

Sd/-R.Sujatha
நீதித்துறை நடுவர் எண்.2
கரூர்